நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஜ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 108/2023

அ.சா: 1 (LW 1)சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலா. | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

29.10.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை: தொடங்கப்பட்ட நேரம் 11.13 மு.ப – 11.34 மு.ப

நான் தற்பொழுது ஸ்ரீரங்கபுரம் ரைஸ் மில் தெற்கு தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் விவசாயம் செய்து வருகிறார். ஆஜர் 4 எதிரிகளையும் எனக்கு தெரியும். முதல் எதிரி சந்திரன் எனது கணவரின் உடன்பிறந்த அண்ணன் ஆவார். 2, 3 எதிரிகள் 1வது எதிரியின் மைத்துனர்கள் ஆவார்கள். 4வது எதிரி மேற்கூரிய எதிரிகளுக்கு நண்பர் ஆவார். நாங்கள் ஸ்ரீரங்கபுரம் ரைஸ்மில் தெருவில் குடியிருந்து வருகிறோம். எனக்கு பிரித்திகா என்ற பெண்ணும் விஷ்ணுபிரசாத் என்ற மகனும் உள்ளனர். எனது மாமனார் சோமசுந்தரம் 24.12.2021ம் தேதி எனது மகன் விஷ்ணுபிரசாத்திற்கு அவர் சுயமாக சம்பாதித்த 11 ஏக்கர்

தோட்டத்தை எனது மகனுக்கு கிரையமாக விற்றுவிட்டார். 8 ஏக்கர் காட்டினை எனது மாமனார் எனது கணவருக்கு தானசெட்டில்மெண்டாக 28.06.2022ம் தேதியில் வழங்கினார். எனது மாமனார் பெயரில் EB சர்வீஸ், கிணறு மற்றும் கிணற்றை சுற்றியுள்ள இடங்களை 2வது எதிரியான வேல்முருகன் மனைவி கங்கா தேவிக்கு மோசடியாக கிரையம் செய்து கொண்டார். இது சம்பந்தமாக எனது கணவர் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் புகார் கொடுத்திருந்தார். அது விசாரணைக்கு வந்ததிருந்தது. இதன் காரணமாகவும் சொத்தை எனது கணவருக்கும் எனது மகனுக்கும் கொடுத்ததில் முன்விரோதம் எங்கள் குடும்பத்திருக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்து வந்தது. கடந்த 27.08.2022ம் ஆண்டு 3 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் ஸ்ரீரங்கபுரம் வணிக வளாகம் முன்பு எனது கணவர் குமரன் நின்றுக்கொண்டிருந்தபொழுது எனது கணவரின் அண்ணன் 1வது எதிரி சந்திரன் கையில் அருவாளுடன் வந்து சொத்தெல்லாம் நீ எழுதி வாங்கிட்டாயா எங்களுக்கு சொத்து கிடையாதா நீ செத்தால்தான் சொத்து வரும் என்றும் கெட்ட வார்தையானா தேவடியா மகனே என்று பேசி எதிரி 1 கையில் வைத்திருந்த அருவாளால் நீ செத்தால்தான் எனக்கு சொத்து வரும் இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி எனது கணவரை வெட்ட வரும்பொழுது அவர் கையால் மறித்ததால் வலது பக்க மூன்று விரல்களான நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல் மற்றும் இடது பக்க இரண்டு விரல்களான மோதிர விரல், சுண்டு விரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டு அனைத்து விரல்களும் தொங்கிவிட்டன. கையில் வலி ஏற்பட்டவுடன் இடது பக்க பின் தலையிலும் இடது கை புஜம் மற்றும் இடது கை மொழிக்கு கீழ், இடது கால் தொடைக்கு கீழ் ஆகியவற்றில் அவர் அருவாளால் வெட்டியதில் பலத்த காயம் ஏற்பட்டது. எங்கள் ஊரை சேர்ந்த கண்ணன், முருகன் ஆகியோர் சத்தம் போட்டவுடன் எதிரிகள் தப்பி சென்றுவிட்டனர். அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நானும் ஆம்புலன்ஸில் சென்றேன். மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். நான் போலீசாரிடம் மருத்துவமனையில் வைத்து எனது கணவர் உடுத்திருந்த வெள்ளை காப்பி கலர் கலந்த கட்டம்போட்ட சட்டை மற்றும் வெள்ளை

காப்பி பச்சை நிறம் கலந்த கைலி ஆகியவற்றில் இரத்த கரை படித்திருந்ததை நானும் எனது கணவரும் ஒப்படைத்தோம். எனது கணவரை மேல் சிகிச்சைக்காக விக்ரம் மருத்துவமனைக்கு அன்றைய தினமே முதலுதவி செய்த பின்னர் அங்கு சென்றோம். அங்கு 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். என்னிடம் காட்டப்படும் மர கைப்பிடியுடன் கூடிய அருவாளால்தான் எனது கணவரை 1வது எதிரி வெட்டினார். அந்த அருவாள் **சா.பொ.1** ஆகும். நான் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 01.05 பி.ப – 01.44 பி.ப

நான் ஸ்ரீரங்கபுரத்திற்கு குடி வருவதற்கு முன்பாக நிலக்கோட்டை தாலுாக செக்காப்பட்டியில் குடியிருந்து வந்தேன். 2008, 2009ல் ஸ்ரீரங்கபுரத்திற்கு குடி வந்தோம். செக்காப்பட்டியில் உள்ள நிலத்தை எனது மாமியார் எனது கணவருக்கு தானமாக கொடுத்தார் என்றால் சரிதான். தான பத்திரத்தில் சொன்ன நிபந்தனையை கடைப்பிடிக்காததால் 1ம் எதிரி மனைவி சிவராணிக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் மனைவிக்கு கொடுத்த கிரைய பத்திரத்தில் கொடுத்த சொத்தை எனது கணவர் நிலக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் OS 195/2000ல் வழக்கு தாக்கல் செய்து Exparte உத்தரவு பெற்றார் என்றால் சரிதான். அந்த exparte உத்தரவை பயன்படுத்தி எனது கணவர் அந்த சொத்தை என்து பெயருக்கு மாற்றிவிட்டார் என்றால் சரிதான். அந்த Exparte உத்தரவை இரத்து செய்ய IA 1/2023ல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இதற்கு முன்னர் இரண்டு முறை தாக்கல் செய்து set aside petition தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த IA எண் எனக்கு தெரியாது. அவர் ஏற்கனவே தாக்கல் செய்த மனு எதுவும் தள்ளுபடி ஆகவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் சரியல்ல. அவர் காண்ட்ராக்ட் வேலை செய்து வந்தார். எனது மாமனாருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றாலும் பூர்வீக சொத்து அடிப்படையில்தான் அவருக்கு நிலங்கள் கிடைக்கப்பெற்றன என்றால் சரியல்ல. எனது மாமனார் காண்ட்ராக்ட் வேலை செய்து வருமானம் ஈட்டி வந்ததாக வழக்கிற்காக


SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.29 16:03:24 +0530

சொல்கிறேன் என்று சொன்னாலும் அதற்கு என்னிடம் எந்தவித ஆவணமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது மாமனார் பெயரில் உள்ள சொத்துகளில் 1ம் எதிரியான சந்திரன் என்பவருக்கும் பங்கு உள்ளது என்று சொன்னால் எனது மாமனாரின் சுய சம்பாத்திய சொத்து என்பதால் அவருக்கு பங்கு எதுவும் இல்லை. என் மாமனார் வயதான காலத்தில் வயோதிகம் காரணமாக நோய்வாய்ப்பட்டு தன்னிலை அறியாமல் இருந்து வந்தார் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. அவருக்கு சுகர் மற்றும் பிரஸர், இருதய நோய் சம்பந்தமான மற்றும் வெரிக்கோஸ் ஆகிய நோய் மட்டும்தான் இருந்தது. அவர் தன்னிலை அறியாமல் இல்லை. எனது மாமனாரின் இறுதி காலகட்ட தன்னிலை அறியாத சூழ்நிலையில் இருந்ததை என் கணவர் சாதகமாக பயன்படுத்தி அவர் பெயரிலும் எங்கள்து மகன் பெயரிலும் எல்லா சொத்துகளையும் எழுதி நய வஞ்சகமாக அபகரித்துக்கொண்டார் என்றால் சரியல்ல. 2ம் எதிரி வேல்முருகன் தன் மனைவி பெயருக்கு எனது மாமனார் பெயரில் இருந்த EB சர்வீஸ், கிணறு மற்றும் அதை சுற்றில் அமைந்துள்ள வாரி வாய்க்கால் உட்பட அனைத்தையும் எழுதி கொடுத்ததாக சொல்வது உண்மை இல்லை என்று சொன்னாலும் வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னாலும் சரியல்ல. எனது கணவர் மீது குற்றவியல் வழக்கு எத்தனை உள்ளது என்றால் ஒன்று இருந்தது அது தற்பொழுது விடுதலை ஆகிவிட்டது. எனது கணவர் மீது கண்டமனூர் காவல் நிலைய குற்ற எண்.27/2009 என்ற வழக்கில் என் கணவர் மீது கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு எனது கணவரை 3ம் எதிரியாக சேர்த்தது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் ஆம். இவ்வழக்கில் 1ம் எதிரி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கொலை வழக்கில் இறந்துபோன எஸ்.என்.ராமசாமி என்பவருக்கும் என் கணவருக்கும் எந்த சம்பந்தம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எஸ்.என்.ராமசாமியை கொலை செய்வதற்கு கூலிபடையை ஏற்பாடு செய்து வந்ததாற்காக எனது கணவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பார்த்தேன். நான் கொடுத்த புகாரிலும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகத்தான் சொல்லியுள்ளேன்.

பின்னிட்டு சாட்சி போலீஸ் கேட்கவில்லை. நான் சொல்ல முடியவில்லை என மறுத்து சாட்சியம் அளித்தார். என்னை போலீசார் என்னை மறுபடியும் எப்பொழுது விசாரிதார்கள் என்றால் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரிதார்கள். அங்கு வைத்தாவது போலீசாரிடம் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லியுள்ளேர்களா என்றால் போலீசாரும் கேட்கவில்லை நானும் சொல்லவில்லை. ஏற்கனவே உரிமையியல் நீதிமன்றத்தில் என் கணவருக்கு ஆதரவாக பெறப்பட்ட ஒருதலைப்பட்சமான உத்தரவின் அடிப்படையில் என் பெயருக்கு சொத்தை மாற்றி எழுதி கொடுத்தது சம்பந்தமாக நிலக்கோட்டையில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை இரத்து செய்ய கோரி 1ம் எதிரி சந்திரன் IA 1/2023 in OS 195/2000 என்ற வழக்கில் மனு தாக்கல் செய்துள்ளதால் எங்கு என் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்திற்கு வில்லங்கம் ஏற்பட்டுவிடும் என்பதற்காக உண்மைக்கு மாறாக புகார் கொடுத்துவிட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முன்விரோதத்தை மனதில் வைத்து 27.08.2022ம் தேதி காலை 06.00 மணிக்கு 1ம் எதிரி வீட்டிற்கு சென்று அவரை எனது கணவர் கத்தியால் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நானும் எனது கணவருடன் முன்னுக்கு பின்னாக சென்றேன் என்றால் சரிதான். நானும் எனது கணவரும் சேர்ந்து முன்னுக்கு பின்னாக சம்பவ இடத்திற்கு சென்றுகொண்டிருந்தது பற்றி போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலீசார் கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை. அன்றைய தினம் எனது கணவர் 1ம் எதிரியை அவரது வீட்டில் வைத்து தாக்கியதில் ஏற்பட்ட காயத்திற்கு க.விலக்கு அரசு மருத்துவமனையில் ஒரு வார காலம் தொடர் சிகிச்சையல் இருந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரியை எனது கணவர் தாக்க முற்பட்டபொழுது அவர் கையில் வைத்திருந்த கத்தி உருவி அவர் கையில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரியை தாக்கிவிட்டு பதட்டமாக வெளியே வந்த எனது கணவர் அங்கிருந்த கதவு தாழ்வாரத்தில் மோதி தனக்குதானே காயத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு செல்லும் வரை நல்ல நிலையில் பேசி கொண்டுதான் வந்தார்.

அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து தையல் போடும்பொழுதுதான் சிறிது மயக்கம் அடைந்தார். என் கணவர் க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதற்கு முன்னதாகவே 1ம் எதிரி சந்திரன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் க.விலக்கு அரசு மருத்துவமனையில் வைத்துதான் புகாரை எழுதி கொடுத்தேன். அரசு மருத்துவமனையில் காலை 07.40 முதல் மதியம் 01.00 மற்றும் 01.30 வரை இருந்தேன். புகார் காலை 10.30 மணிக்கு கொடுத்தேன். எனது கணவர் அரசு மருத்துவமனையில் பேசும் நிலையில்தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவருக்கு பதிலாக நான் புகார் எழுதி கொடுப்பதற்கு ஏதேனும் காரணம் உள்ளதால் என்றால் இல்லை. எனது கணவர் புகார் கொடுத்தால் உண்மை வெளிபட்டுவிடும் என்பதால் பிறருடைய ஆலோசனையுடன் சம்பவ இடத்தை மாற்றி நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவ மற்றும் சம்பவ இடம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 1ம் எதிரி தாக்கியதால் எனது கணவருக்கு எந்த வித காயங்களும் ஏற்படவில்லை என்றாலும் எனது கணவர் 1ம் எதிரியை தாக்க முற்பட்டபொழுது கையில் வைத்திருந்த கத்தி உருவி அவரது கையிலும் தடுமாறி வெளியே வரும்பொழுது அங்குள்ள கதவு மற்றும் முற்றத்தில் மோதி காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றாலும் வழக்கிற்காக மிகைப்படுத்தி கொடுக்க வேண்டும் என்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து எனது கணவருக்கு ஏற்பட்ட காயங்களை கொடுங்காயங்களாக மிகைப்படுத்தி சான்றினை பெற்று இவ்வழக்கிற்காக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அளித்த புகார் மற்றும் விசாரணையில் சம்பவ நேரத்தில் பயன்படுத்தப்பட்ட அருவாள் பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் போலீஸ் கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை. இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அருவாளை (சா.பொ.1) என்னிடம் காட்டி விசாரித்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் அரசு சார்பாக குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1 அருவாளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சம்பவ நேரத்தில்

பயன்படுத்தப்பட்டது கத்தி என்றாலும் சரியல்ல. ஒருதலைபட்ச உத்தரவின் அடிப்படையில் என் பெயருக்கு மாற்றப்பட்ட சொத்தை சட்டப்படியாக 1ம் எதிரி தரப்பினர் மீள பெற்றுவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக 1ம் எதிரியை தாக்கிவிட்டு அவர் என் கணவரை தாக்கியதாக உண்மைக்கு மாறாக புகார் கொடுத்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 எதிரிகள் 1ம் எதிரியை தூண்டிவிட்டதாக புகாரிலும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் எங்கு வைத்து எந்த வகையில் தூண்டிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 4 எதிரிகள் 1ம் எதிரிக்கு துணை போககூடாது என்ற அடிப்படையில் அவர்கள் மீதும் சேர்த்து புகார் கொடுத்து அதுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2 முதல் 4 எதிரிகள் 1ம் எதிரியை தூண்டிவிடவில்லை என்றாலும் இந்த வழக்கில் 1ம் எதிரிதான் பாதிக்கப்பட்ட நபர் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் எந்தவிதமான வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.29 16:03:49 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:29.10.2025